ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2364/38 - 2023 දෙසැම්බර් මස 31 වැනි ඉරිදා - 2023.12.31
2364/38 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) : மாகாண சபை

மாகாண சபை அறிவித்தல்கள்

**வடமேல் மாகாண மாகாண சபை**

**வடமேல் மாகாண மாகாண சபையின் 2018 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க தெருப் பயணிகள் போக்குவரத்துச் சேவை சாசனம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வடமேல் மாகாணத்தின் மாகாண சபையினால் 2023.10.02 ஆந் திகதி நிறைவேற்றப்பட்டு 2023.11.16 ஆந் திகதி வடமேல் மாகாண ஆளுநரால் அனுமதியளிக்கப்பட்ட மேற்படி கொள்கைப் பிரகடனத்தை அனைவரும் அறிந்து கொள்வதற்காக இங்கு கீழே பிரசுரிக்கிறேன்.

**என். எம். ஜே. பெர்னாண்டோ,**
**டி.எச்.எம்.என்.பி. தசநாயக்க**
சபைச் செயலாளர்,
வடமேல் மாகாண சபை.

வடமேல் மாகாண சபை அலுவலகம்,
குருணாகல்,
2023, திசெம்பர் 28.

## வடமேல் மாகாண மாகாண சபையின் 2018 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க தெருப் பயணிகள் போக்குவரத்துச் சேவை சாசனம்

நீண்ட பெயர்

வடமேல் மாகாணத்தினுள் மோட்டார் வாகனங்கள் மூலம், பாதைகளின் ஊடாக போக்குவரத்து சேவையினை வழங்கவும் மற்றும் முறைப்படுத்துவதற்காகவும், தெருப்போக்குவரத்து சேவைகள் மற்றும் வடமேல் மாகாணத்திற்கு உரித்தான அளவிற்கு வடமேல் மாகாணத் துடன் தொடர்புபடுகின்ற மாகாண போக்குவரத்து சேவைகளை வழங்குதல் மற்றும் முறைப்படுத்துவதற்காகவும், வடமேல் மாகாண பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபையினை அமைப்பதற்காகவும், அது தொடர்பாக அல்லது அதற்கு தற்செயலான விடயங் களுக்காக ஒழுங்குவிதிகளை ஏற்பாடு செய்தல் மற்றும் 1995 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வடமேல் மாகாணத்தின் பயணிகள் போக்குவரத்துச் சேவை சாசனத்தினை இரத்து செய்வதற்கான சாசனமாகும்.

இச் சாசனத்தின் ஒழுங்கமைப்பில் வழங்கப்பட்டுள்ள அளவிற்கு மாத்திரம் காலத்திற்கு காலம் திருத்தியமைக்கப்பட்ட 1951 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்கத்திற்கான மோட்டார் வாகனச் சட்டத்தின் (203 ஆம் அதிகாரம்) விதிகள் மற்றும் காலத்திற்கு காலம் திருத்தியமைக்கப்பட்ட 1983 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்கத்திற்கான தனியார் பேரூந்து சேவைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய பொருத்தமற்றதாகும்.
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வடமேல் மாகாண மாகாண சபையினால் இவ்வாறு விதிக்கப்படுகின்றது.

சுருக்கப் பெயர்

01. இச் சாசனம் வடமேல் மாகாண மாகாண சபையின் 2018 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க பயணிகள் போக்குவரத்துச் சேவை சாசனம் என்று அறிமுகப்படுத்தப்படும்.

அமுல்படுத்தப்படும் திகதி

02. வடமேல் மாகாண ஆளுநர் அவர்களின் அங்கீகாரம் கிடைத்த திகதி தொடக்கம் இச் சாசனம் நடைமுறைப் படுத்தப்படும்.

சாசனத்தின் நோக்கம்

03. இச் சாசனத்தின் நோக்கம் பின்வருமாறாகும்.

(1) 1995 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வடமேல் மாகாணத்தின் பயணிகள் போக்குவரத்து சேவையினை இரத்து செய்தல்.

(2) வடமேல் மாகாணத்தினுள் மோட்டார் வாகனங்கள் மூலம் பாதைகளில் பயணிகள், பாடசாலை பிள்ளைகள், அலுவலக சேவையாளர்கள்/கைத்தொழில் பேட்டை ஊழியர்கள் போக்குவரத்து சேவையினை திறனுடனும் வரவேற்கக் கூடிய வகையில் கொண்டு நடாத்தும் சேவைகளை ஒழுங்கமைத்தல் மற்றும் அப்போக்குவரத்து சேவைகளை முறைப்படுத்தல் மற்றும் அப்போக்குவரத்து நடவடிக்கையினை கொண்டு நடாத்தல்

(3) வடமேல் மாகாணத்திற்குரித்தாகின்ற அளவிற்கு வடமேல் மாகாணத்திற்கு தொடர்புபடுகின்ற மாகாண போக்குவரத்துச் சேவைகளை ஏற்படுத்துதலும் முறையாக கொண்டு நடாத்துதலும்,

(4) வடமேல் மாகாணத்தினுள் பயணிகள் போக்குவரத்துச் சேவைகளை மேம்படுத்துதல் மற்றும் தரத்தினை உயர்த்துவதற்காக பயணிகளினதும் முதலீட்டாளர்களதும் மேம்பாட்டிற்காக புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தல்.

(5) வடமேல் மாகாண மாகாண சபையின் பயணிகள் போக்குவரத்துச் சேவை அதிகார சபையினை நிறுவுதல்.

### I ஆம் பகுதி

### வடமேல் மாகாண மாகாண சபையின் தெருப் பயணிகள் போக்குவரத்துச் சேவை அதிகார சபையினை நிறுவுதல்

தெரு பயணிகள் போக்குவரத்து சேவை அதிகாரச் சபையினை நிறுவுதல்.

04. (1) இங்கு இதற்கு பிறகு "அதிகார சபை" என்று அறிமுகப்படுத்தப்படுகின்ற "வடமேல் மாகாண தெருப் பயணிகள் போக்குவரத்துச் சேவை அதிகார சபை" நிறுவப்படும்.

(2) மேலே 4(1) ஆம் உப பிரிவினால் அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ள பெயரில் அது தொடர்ச்சியாக இருப்புள்ளதும் பொது முத்திரையுடன் வழக்கு தொடர்வதற்கும் வழக்கு தாக்கல் செய்வதற்கும் அதிகாரமுள்ள அமைப்புடைய நிறுவனமாக அமைதல் வேண்டும்.

05. (1) அதிகார சபைக் குழுவில் கீழ் காணப்படும் உறுப்பினர்கள் ஒன்பது பேர்கள் உள்ளடங்க வேண்டும். அதிகார சபையின் பணிப்பாளர் குழு

(2) பதவி அதிகாரத்தினால் நியமிக்கப்படுகின்ற உறுப்பினர்கள்,

(அ) வடமேல் மாகாண போக்குவரத்து விடய பொறுப்புடைய அமைச்சின் செயலாளரினால் பெயர் குறிப்பிடப்படுகின்ற நிர்வாக நிலையில் உள்ள சிரேட்ட உத்தியோகத்தர் ஒருவர்,

(ஆ) வடமேல் மாகாண பிரதம செயலாளரினால் பெயர் குறிப்பிடப்படுகின்ற சிரேட்ட உத்தியோகத்தர் ஒருவர்.

(இ) வடமேல் மாகாணத்திற்கு பொறுப்புடைய சிரேட்ட பொலிஸ் அத்தியட்சகர் அல்லது அவரினால் பெயர் குறிப்பிடப்படுகின்ற உதவி பொலிஸ் உத்தியோகத்தர் பதவிக்கு குறையாத உத்தியோகத்தர் ஒருவர்

(ஈ) வடமேல் மாகாண கல்விப் பணிப்பாளர் அல்லது அவரினால் பெயர் குறிப்பிடப்படும் சிரேட்ட உத்தியோகத்தர் ஒருவர்.

(உ) வடமேல் உள்ளூராட்சி ஆணையாளர் அல்லது அவரினால் பெயர் குறிப்பிடப்படும் சிரேட்ட உத்தியோகத்தர் ஒருவர்.

(3) அமைச்சர் அவர்களினால் நியமிக்கப்படுகின்ற உறுப்பினர்கள்

(அ) போக்குவரத்து சட்டம், முகாமைத்துவம், வர்த்தகம், நிருவாகம் அல்லது சிவில் பொறியியல் ஆகிய துறைகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அளவிலான தகைமைகளையுடையதும் அவ் விடயம் பற்றி சிறந்த அனுபவமும் திறமையையும் உடையவர் என்று விடயப் பொறுப்புடைய அமைச்சர் அவர்களினால் திருப்தி அடைகின்றவர்கள் நான்கு பேர்கள்.

(4) அதிகார சபையின் அனைத்து உறுப்பினர்களும் அமைச்சர் அவர்களின் கையொப்பத்துடன் வழங்கப்படுகின்ற கடிதம் மூலம் ஒழுங்கு முறைப்படி நியமிக்கப்பட வேண்டும்.

06. (1) மேலே 3(அ) ஆம் உப பிரிவின் கீழ் நியமிக்கப்படுகின்ற உறுப்பினர்களுக்கிடையே ஒரு உறுப்பினரை அமைச்சர் அவர்களினால் தலைவராக நியமித்தல் வேண்டும். அதிகார சபையின் தலைவர்.

(2) தலைவர் அவர்களின் பதவிக் காலம் அவர் அதிகார சபையில் உறுப்புரிமை காலம் அல்லது அமைச்சர் அவர்களின் திருப்திக்கு உள்ளாகும் வரை இருத்தல் வேண்டும்.

(3) இச் சாசனத்தில் 11 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களுக்காக தலைவருக்கு உரிய பதவியில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு தவறும் சந்தர்ப்பத்தில் தலைவராக வேலைப் பொறுப்பினை நிறைவேற்றுவதற்காக வேறு உறுப்பினர் ஒருவரை அமைச்சரினால் நியமிக்க முடியும்.

07. எவர் ஒருவர்,

1. பாராளுமன்ற மந்திரி ஒருவர், ஏதாவதொரு மாகாண சபையின் மந்திரி ஒருவர் அல்லது உள்ளூராட்சி நிறுவனத்தின் உறுப்பினர் ஒருவராயின், பணிப்பாளர் குழுவின் உறுப்பினராவதற்கான தகைமை இன்மை.

(2) இலங்கைப் பிரசையாகவும் வடமேல் மாகாணத்தில் நிரந்தரமாக குடியிருக்காத சந்தர்ப்பத்தில்

(3) ஏற்றுக் கொள்ளப்பட்ட வைத்தியக் குழுவினால் மனநோயாளி என்று தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தால் அல்லது முழு செயலற்ற நிலைக்கு உட்பட்டிருந்தால்.

(4) இலங்கையில் ஏதாவதொரு நீதிமன்றத்தினால் பத்து ஆண்டிற்கு (10) மேற்பட்ட காலத்திற்கு குற்றத் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்ட குற்றவாளியாயின்,

(5) இச் சாசனத்தில் 15 ஆம் பிரிவின் கீழ் பணிப்பாளர் குழுவிற்கு நியமிப்பதற்கு தகுதியற்ற ஒருவராயின், அவர் அதிகார சபையின் பணிப்பாளர் குழுவில் உறுப்பினராக நியமிப்பதற்கும் நியமிக்கப்பட்டிருப்பின் தொடர்ந்து செயற்படுவதற்கும் தகைமையற்றவராவார்.

உறுப்பினர்களின் நிதி தொடர்பு மற்றும் கடமைகள்

8. (1) அமைச்சர் அவர்களினால் அதிகார சபையின் பணிப்பாளர் குழுவின் உறுப்பினராக யாராவது ஒருவரை நியமிப்பதற்கு முன் அவரினால் அதிகார சபையின் பணிப்பாளர் குழுவின் உறுப்பினராக தமது பொறுப்பினை நிறைவேற்றும் போது எதிர்மறையான விளைவுகள் ஏற்படுவதற்கு இடமுள்ள அதிகார சபையின் நடவடிக்கைகளுக்கு உரிய நிதி அல்லது வேறு தொடர்புகள் அந்த நபருக்கு இல்லை என்று அமைச்சர் திருப்தியடைதல் வேண்டும்.

(2) அதிகார சபையின் பணிப்பாளர் குழுவின் உறுப்பினர் ஒருவர் அப் பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின்பு அவ்வாறான ஏதாவதொரு தொடர்பு இல்லை என்பது பற்றி அமைச்சர் அவர்கள் காலத்திற்கு காலம் திருப்தியடைய வேண்டும்.

(3) அதிகார சபையின் பணிப்பாளர் குழுவின் உறுப்பினராக நியமிப்பதற்கு அமைச்சரினால் நியமிக்கப்பட்ட ஒருவர், அமைச்சரினால் உரிய செயலுக்காக கோரிக்கை செய்யப்படுகின்ற எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இச் சாசனத்தின் செயல்களுக்காக தேவை என்று அமைச்சரினால் கருதப்படுகின்ற ஏதாவதொரு தகவல்களையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) அதிகார சபையினால் ஏற்படுத்தப்படுகின்ற அல்லது ஏற்படுத்திக் கொள்வதற்கு எதிர்பார்க்கின்ற ஏதாவதொரு உடன்படிக்கை பற்றி ஏதாவதொரு முறையில் நேரடியாக அல்லது மாற்று வழியிற்கு ஆர்வமுள்ள அதிகார சபையின் பணிப்பாளர் குழுவின் உறுப்பினர் ஒருவரினால் தமது தொடர்பின் தன்மை பற்றி அதிகார சபையின் கூட்டத்தின் போது வெளிப்படுத்த வேண்டியதுடன், அவ்வாறு வெளிப்படுத்துவதை அதிகார சபையின் கூட்ட அறிக்கைகளில் வெளிப்படுத்த வேண்டியதுடன், அவ் உடன்படிக்கை தொடர்பாக அதிகார சபையினால் நடாத்தப் படுகின்ற ஏதாவதொரு கலந்தாலோசனைக்கு அல்லது அதிகார சபையினால் எடுக்கப்படுகின்ற ஏதாவதொரு தீர்மானத்திற்கு அப் பணிப்பாளர் சபையின் உறுப்பினர்கள் கலந்துக் கொள்ளலாகாது.

அதிகார சபையின் பணிப்பாளர் குழு

9.

(1) அதிகார சபையின் அனைத்து பணிப்பாளர் குழு கூட்டத்தின் போதும் கூட்டம் தலைவர் தலைமை வகித்தல் வேண்டும். தலைவர் ஏதாவதொரு கூட்டத்திற்கு வருகைத் தராத சந்தர்ப்பத்தில் வருகைத் தந்துள்ள உறுப்பினர்களினால் அவர்களுக்கிடையே எவர் ஒருவரையாவது அக் கூட்டத்திற்காக தலைவராக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

(2) அதிகார சபையின் பணிப்பாளர் குழுக் கூட்டத்திற்கு பெரும்பான்மை மூன்று பேர்களாவது இருத்தல் வேண்டும்.

(3) அதிகார சபையினால் கருத்தில் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற அனைத்து விடயங்களும் அதிகார சபையின் பணிப்பாளர் குழுக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட வேண்டியதுடன், அவ் விடயங்கள் கூட்டத்திற்கு வருகைத் தந்து வாக்கினை உபயோகப்படுத்துகின்ற பணிப்பாளர் குழுவின் உறுப்பினர்களில் பெரும்பான்மையினரினால் அனுமதிக்கப்பட வேண்டும்.

(4) ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் பிரேரணைக்கு கட்சியாகவும் எதிராகவும் சமமான வாக்குகள் கிடைத்திருந்தால், அவ்வாறான சந்தர்ப்பத்தில் தலைவருக்கு முடிவான வாக்குக் கிடைத்தல் வேண்டும்.

(5) ஏதாவதொரு பணிப்பாளர் குழுவின் உறுப்பினர் ஒருவரை தேர்ந்தெடுப்பதற்காக அல்லது நியமிப்பதற்காக ஏதாவதொரு குறைபாடு இருந்ததாக அல்லது அவ்வாறான உறுப்பினர் தகைமையற்றவர் என்று பின்பு கண்டுபிடிக்கப்பட்டால் அவருக்கு தகைமை உள்ளதாக கருதி அவர் கலந்துக் கொண்ட பணிப்பாளர் குழுக் கூட்டத்தில் செய்யப்பட்ட எல்லா நடவடிக்கைகளும் செல்லுபடியாதல் வேண்டும்.

(6) அதிகார சபையின் பணிப்பாளர் குழுவின் உறுப்பினர்களில் ஏதாவதொரு வெற்றிடம் ஏற்பட்டதன் காரணமாகவே மாத்திரம் ஏதாவதொரு பணிப்பாளர் குழுவின் கூட்டத்தில் எவ்வித செயற்பாடும் அல்லது நடவடிக்கையும் அதிகாரமற்றதாக இருக்க கூடாது.

(7) பணிப்பாளர் குழு குறைந்த பட்சம் ஒரு மாதத்திற்கு ஒரு தடவையாவது கூட்டம் கூட வேண்டும். கூட்டம் வேண்டும் என்று அதிகார சபையின் தலைவர் கருதுகின்ற எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அல்லது பணிப்பாளர் குழுவின் மூன்று உறுப்பினர்களினால் எழுத்து மூலமான கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அல்லது பணிப்பாளர் குழுவின் கூட்டம் ஒன்றை தலைவரினால் கூட்ட வேண்டும்.

(8) இச் சாசனத்தின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு பணிப்பாளர் குழுவின் கூட்டம் மற்றும் அக் கூட்டங்களின் நடவடிக்கைகளை செயற்படுத்த வேண்டிய முறை பற்றி பணிக் கட்டளைக்குரிய பணிப்பாளர் குழுவினால் விதிகள் ஒழுங்கமைக்க முடியும்.

10. (1) உரிய காலத்திற்கு முன் பதவியினை கைவிட்டால் அல்லது இச்சாசனத்தில் 12 அல்லது 13 ஆம் பிரிவின் கீழ் அமைச்சரினால் பதவியில் இருந்து நீக்கப்பட்டால் தவிர மாகாண அதிகார சபையின் எல்லா உறுப்பினர்களும் தமது நியமனத் திகதி தொடக்கம் மூன்று ஆண்டு காலம் பதவி வகிக்கப்படுவர். பணிப்பாளர் குழு உறுப்பினர்களின் பதவி காலம்

(2) என்றாலும் உறுப்புரிமையில் பணிப்பாளர் குழுவில் ஏதாவதொரு வெற்றிடத்தினை நிரப்புவதற்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் பதவி வகிப்பது தமது முன்னோரின் பதவிக் காலத்தில் மீதி காலத்திற்காக மாத்திரமாகும்.

11. நோய் காரணமாக அல்லது இலங்கையில் இருந்து வெளியேறி இருப்பதனால் அல்லது வேறு காரணமாக அல்லது உரிய கடமையினை நிறைவேற்றுவதற்கு எந்தவொரு உறுப்பினர் ஒருவரையும் தற்காலிகமாக தவறும் பட்சத்தில் அக் காலத்திற்காக 5 ஆம் மற்றும் 7 ஆம் ஒழுங்கு விதிகளுக்கு உட்பட்டு அமைச்சரினால் உறுப்பினர் ஒருவராக நடவடிக்கை மேற்கொள்வதற்கு வேறு ஒருவரை நியமிக்க முடியும். பணிப்பாளர் குழுவில் செயலாற்றும் நியமித்தல்

12. அமைச்சரிடத்தில் உரிய செயற்பாடுக்காக செய்யப்படும் எழுத்து மூலமான அறிவித்தல் ஒன்றின் மூலம் பணிப்பாளர் குழுவின் எந்தவொரு உறுப்பினரும் எச்சந்தர்ப்பத்திலேனும் தமது பதவியில் இருந்து கேட்டு விலகலாம். கேட்டு விலகல் பதவியில் இருந்து

13. (1) அமைச்சரினால் இச் சாசனத்தின் 5(4) ஆம் உப பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் குழுவின் உறுப்பினர் ஒருவர் எச்சந்தர்ப்பத்திலும் காரணம் தெரிவிக்காது அமைச்சருக்கு பதவியில் இருந்து நீக்கலாம். பதவியில் இருந்து நீக்குதல்.

(2) இச் சாசனத்தில் 5(2)(அ) தொடக்கம் (உ) வரையிலான உப பிரிவின் கீழ் பதவி அதிகாரத்தினால் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் குழு உறுப்பினர்களை அகற்றுவதானால் அவ் உறுப்பினர் சிபாரிசு செய்த நிறுவாகத் தலைவரின் இணக்கத்துடன் அமைச்சருக்கு அவ் உறுப்பினரை பதவில் இருந்து அகற்ற முடியும்.

14 . பணிப்பாளர் குழுவின் எந்த ஒரு உறுப்பினர் ஒருவர் தலைவருக்கு அறிவிக்காது தொடர்ந்து பணிப்பாளர் குழு கூட்டங்கள் மூன்று தவணைகளுக்கு கலந்துக் கொள்ளாத உறுப்பினரின் பணிப்பாளர் குழு உறுப்புரிமை இரத்து செய்யப்படும். பதவி காலம் முடிவுறுத்தல்

15. பதவிக் காலம் முடிவடைந்த பின்பு உறுப்புரிமை இரத்தாகும் உறுப்பினரும், சுய விருப்பத்துடன் அல்லது பதவிக் காலத்தினுள் கேட்டு நீங்கிய உறுப்பினரும் மீண்டும் நியமிக்கலாம். என்றாலும் 13 ஆம் பிரிவின் கீழ் அமைச்சரினால் அகற்றப்பட்ட உறுப்பினர் அல்லது இச் சாசனத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் உறுப்புரிமை இரத்து செய்யப்பட்டஒருவர் மீண்டும் நியமிப்பதற்கு தகைமையற்றவராவார். மீண்டும் நியமித்தல்

16. பணிப்பாளர் குழுவின் உறுப்பினர்களுக்கு மற்றும் தலைவருக்கும் அமைச்சுக் குழுவின் இணக்கத்துடன், அமைச்சரினால் தீர்மானிக்கின்ற ஊதியம் மாகாண அதிகார சபையின் நிதியத்தில் இருந்து செலுத்த முடியும். அதிகார சபையின் உறுப்பினர் களுக்கான ஊதியம்

*மாகாண அதிகாரியின் பொது முத்திரை*

17. (1) மாகாண அதிகார சபைக்கு இருத்தல் பொது முத்திரை வேண்டும். அந்த முத்திரை பொது முகாமையாளரின் பொறுப்பில் வைத்திருத்தல் வேண்டும்.

(2) மாகாண அதிகார சபையின் முத்திரை மாகாண அதிகார சபையினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு திருத்தி அமைத்துக் கொள்ளலாம்.

(3) மாகாண அதிகார சபையின் முத் திரையினை மாகாண அதிகார சபையின் இரு உறுப்பினர்களின் முன்னிலையில் இன்றி எவ்வித ஆவணத்திற்கும் அல்லது செயல் திறன் பத்திரத்திற்கும் இடலாகாது. அவ் உறுப்பினர் இருவரில் ஒரு உறுப்பினர் மாகாண அதிகார சபையின் பணிப்பாளர் குழுவின் தலைவராக வேண்டும். தமது முன்னிலையில் முத்திரை இடப்பட்டதற்கான சாட்சியாக அவ் உறுப்பினர்கள் இருவருமே அவ் ஆவணத்திற்கு அல்லது செயல் திறன் பத்திரத்திற்கு கையொப்பமிடல் வேண்டும்.

## II ஆம் பகுதி

### மாகாண தெருப் போக்குவரத்து சேவை அதிகார சபையின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்

*பயணிகள் போக்குவரத்து சேவை பற்றிய அதிகாரம்*

18. வடமேல் மாகாணத்தினுள் பொது மக்களின் பயணங்களுக்கு உகந்த நல்ல தரத்தினை உடைய பேரூந்து சேவை காணப்படுகின்றதா என்பது பற்றி தேடிப்பார்த்தல் மற்றும் கால அட்டவணையினை தயாரித்தல் மற்றும் இயக்கிகள் அக் கால அட்டவணையினை பின் பற்றுதல் பற்றி உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் வடமேல் மாகாணத்தினுள் பயணிகள் போக்குவரத்திற்காக பேரூந்துக்களை ஈடுபடுத்த வேண்டிய வழிகளை அனுமதித்தல், வகைப்படுத்தல் மற்றும் தெரு அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்துடைய பாதைகள் தவிர்த்து ஏனைய பாதைகளில் தரிப்பிடங்களை நிர்மாணிக்கும் இடங்களை தீர்மானித்தல்.

*தெரு உரிமப்பத்திரம் வழங்குதல்.*

19. (1) மாகாணத்தினுள் பயணிகள் போக்குவரத்துத் தேவைகளை பூர்த்தி செய்தல் மற்றும் முறைப்படுத்துவதற்காக, பேரூந்துகளை பயன்படுத்துவதற்கு அதிகாரம் வழங்கும் தெரு உரிமப்பத்திரம் வழங்குதல் அந்த உரிமப்பத்திரத்தினை புதுப்பித்தல் அல்லது திருத்தம் செய்தல், இரத்து செய்தல் மற்றும் காலத்தினை நீடித்தல் மற்றும் உரிமையினை முறைப்படுத்தல், அந்த உரிமப்பத்திரத்திற்கான கட்டணத்தை விதித்தல்.

(2) பயணிகளுக்கு போக்குவரத்துக்காக பேரூந்துக்களை பயன்படுத்துவதற்கு தெரு உரிமப்பத்திரத்தை வழங்குவது ஏதாவதொரு நிபந்தனைகளுக்கு உட்பட்டாயின், அந்நிபந்தனைகளை பின்பற்றுவது பற்றி உறுதி செய்துக் கொள்வதும் அவற்றை செயற்படுத்துதலும்.

(3) பயணிகள் போக்குவரத்திற்காக பேரூந்துக்களை பயன்படுத்தும் போது பேரூந்தில் பயணிக்கின்ற அனைத்து பயணிகளுக்கும் நடத்துனர்களினால் கட்டாயமாக பிரவேசப் பத்திரம் வழங்குவதை உறுதி செய்துக் கொள்ள வேண்டும்.

*பயணிகள் போக்குவரத்து சேவைக்காக ஈடுபடுத்தப்படுகின்ற வாகனங்களின் தகுதி மற்றும் தரம் பற்றி தரநிலை*

20. மாகாணத்தினுள் பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தப்படுகின்ற மோட்டார் வாகனத்தின் உரிமப்பத்திரதாரியினால் கொண்டு நடாத்தப்பட வேண்டிய தரம் மற்றும் தகுதி பற்றி வேறு சட்டம் மூலம் விதிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் பயணிகளின் போக்குவரத்திற்கு தேவையான தரமான மற்றும் தகுதியான அத் தரநிலைக்கு செயற்படுத்துவதற்கு அமைச்சரிடத்தில் பரிந்துரைத்தல்.

*தகவல்களை வழங்குதல்.*

21. இச் சாசனத்தின் கீழ் ஏதாவதொரு நோக்கத்திற்காக தேவையான தகவல்கள் மற்றும் அறிக்கை அதிகார சபையிடத்தில் வழங்குமாறு இச் சாசனத்தின் கீழ் அல்லது வேறு எழுத்து மூலமான சட்டம் ஒன்றின் கீழேனும் தெரு உரிமப்பத்திரம் ஒன்றினை பெற்றுக் கொண்டு, வடமேல் மாகாணத்தினுள் அல்லது வடமேல் மாகாணத்தின் ஊடாக பயணிகள் போக்குவரத்து சேவையை மேற்கொள்கின்ற ஒருவருக்கு விதித்தல்.

*பாடசாலை மாணவர்களை கொண்டு செல்லுதல்.*

22. வடமேல் மாகாணத்தினுள் அல்லது வடமேல் மாகாணம் ஊடாக கட்டணத்தினை பிரதிபலனாக அல்லது பரிசு பெறுவதற்காக பாடசாலை, பல்கலைக்கழகம் மற்றும் வேறு கல்வி நிறுவனங்களின் மாணவர்களை கொண்டு செல்வதற்காக உரிமப்பத்திரம் வழங்குதல் மற்றும் திருத்தம் செய்தல், இரத்து செய்தல் மற்றும் காலத்தினை நீடித்தல், உரிமையினை முறைப்படுத்தல், சலுகை கட்டணம் மூலம் குறித்த போக்குவரத்து உரிமப்பத்திரத்தை வழங்குதல்.

23. மாகாணத்தினுள் கட்டணத்தினை பிரதிபலனாக கொண்டு அல்லது பரிசிற்காக பேரூந்துகளில் அல்லது வேனில் போக்குவரத்து செய்கின்ற அலுவலக சேவையாளர்கள் மற்றும் கைத்தொழில் பேட்டை சேவையாளர்கள் போக்குவரத்து செய்யும் சேவையினை முறைப்படுத்தல் உரிய பயணிகளுக்கான சேவையினை கொண்டு நடாத்தலுக்காக அனுமதிப்பத்திரம் வழங்குதல், திருத்தம் செய்தல், இரத்து செய்தல் மற்றும் காலத்தினை நீடித்தல், உரிமையினை முறைப்படுத்தல், அவ் அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதற்காக கட்டணம் விதித்தல். அலுவலக சேவை மற்றும் கைத் தொழில் பேட்டை சேவையாளர்கள் பயணித்தல்.

24. (1) வேறு மாகாணத்தினால் வடமேல் மாகாணத்திற்கு பிரவேசிக்கின்ற, வடமேல் மாகாணத்தினூடாக கட்டணம், பரிசு, பிரதிபலன் அல்லது வெவ்வேறு கட்டணம் மூலம் பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்துகின்ற மோட்டார் வாகனங்களினால் சேவைக் கட்டணம் அறவிடல், நிருவகித்தல் மற்றும் முறைப்படுத்தல். மாகாணங்களுக்கிடையில் போக்குவரத்து சேவை

(2) தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அல்லது வேறு நிறுவனங்களினால் உரிமப்பத்திரம் வழங்குதல் தொடர்பாக பரிந்துரை கோருகின்ற சந்தர்ப்பத் தில், பொருத்தமான வகையில் பரிந்துரை வழங்குதல் மற்றும் இந்த அதிகார சபையின் பரிந்துரை இன்றி வழங்கப்பட்டுள்ள உரிமப்பத்திரத்தினால் போக்குவரத்து செய்கின்ற பேரூந்துகளுக்கு நுழைவு அனுமதி வழங்காததும் அது தொடர்பாக சட்ட ரீதியாக நடவடிக்கை மேற்கொள்ளலும்.

25. வடமேல் மாகாணத்தினுள் பயணிகளின் போக்குவரத்து சேவையின் வளர்ச்சி மற்றும் தரத்தினையும் மேம்படுத்துவதற்காக பயணிகளுக்கு துணைக் குழு அமைத்தல் போன்று முதலீட்டாளர்களின் அபிவிருத்தியிற்காக புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தல், செயற்படுத்தல் மற்றும் விடயப் பொறுப்புடைய அமைச்சரின் மற்றும் விடயப் பொறுப்புடைய அமைச்சரின் செயலாளரின் இணக்கம் மற்றும் பணிப்பாளர் குழுவின் அனுமதியுடன் இதற்காக துணைக் குழுக்களை நிறுவுதல். புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தல்

26. மாகாணத்தினுள் அனைத்து பொது பயணத் தேவைகளை வழங்கும் பேரூந்து போக்குவரத்துக்காக இலங்கை போக்குவரத்து சபையுடன் ஒருங்கிணைந்த அல்லது அதிகார சபையினால் பொருத்தமானது என்று தீர்மானிக்கின்ற, அறிவியல் நேர அட்டவணைகளை விதித்தல், அந் நேர அட்டவணைப்படி போக்குவரத்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அனைத்து இயக்கிகளுக்கும் விதித்தல் மற்றும் அதனை மீறுகின்றவர்கள் பற்றி இருப்பிட சேவைக் கட்டணம் விதித்தல் மற்றும் சட்டரீதியாக நடவடிக்கை மேற்கொள்ளல். நேர அட்டவணையினை அமைத்தல்.

27. அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ள உரிமம் பெறுபவர் பேரூந்தினுள் மற்றும் வெளியில் பயண ஆரம்பத்தினையும் முடிவினையும் மும் மொழியிலும் பெயர்ப் பலகையில் குறிப்பிடல் வேண்டும். பேரூந்து செல்லுமிடம் மற்றும் பயண முடிவு பெயர் பலகை என்பன.

28. அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற உரிமப்பத்திரம் அல்லது வேறு உரிமப்பத்திரத்தின் கீழ் பயணிகள் போக்குவரத்து செய்கின்ற மோட்டார் வாகனங்களின் சாரதிகள் நடத்துனர்கள் மற்றும் சாரதி உதவியாளர்களை பதிவு செய்தல் அடையாளட்டைகளை விநியோகித்தல், அதற்காக கட்டணம் அறவிடல் பதிவுகளை இரத்து செய்தல், புதுப்பித்தல், இடைநிறுத்துதல். சாரதிகள் நடத்துனர் உதவியாளர்களை செய்தல்.

29. மாகாணத்தினுள் மற்றும் மாகாணத்தின் ஊடாக போக்குவரத்து செய்கின்ற இச் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்களில் பயணிகள் போக்குவரத்திற்கு தொடர்புடைய இச் சாசனத்தின் கீழ் குற்றங்களை தேடுதல், தடுத்தல் மற்றும் அவற்றிற்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்வதனை நோக்காக கொண்டு அவசர பரிசீலனை குழுவினை நிறுவுதல் அல்லது நிறுவுமாறு ஊக்குவித்தல் அல்லது உரிய குழுக்களின் அதிகாரம் மற்றும் பணிகளை விதித்தல் அவசர பரிசீலனை குழு

30. மாகாணத்தினுள் வெவ்வேறு கட்டணத்தினால் போக்குவரத்துச் சேவைகளை கொண்டு நடாத்திச் செல்லக்கூடிய வழிகளை அடையாளம் காணல், வகைப்படுத்தல் மற்றும் உரிய ஒவ்வொரு வழிகளில் பயணிகள் போக்குவரத்து சேவை நடவடிக்கைக்காக பயன்படுத்த வேண்டிய பேரூந்து மற்றும் வேறு மோட்டார் வாகனங்களின் வகை மற்றும் தரத்தை விதித்தல். பயணிகள் போக்குவரத்து சேவை வழிகளை அடையாளம் காணல் மற்றும் அவற்றில் போக்குவரத்து செய்ய கூடிய மோட்டார் வாகனத்தை விதித்தல்.

ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கை.

31. அதிகார சபையின் குறிக்கோள்கள் மற்றும் பணிகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தின் ஏற்பாடுகள் வடமேல் மாகாண சபையின் விதி மற்றும் மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு சில சட்டங்களது விதிகளுக்கு உற்பட்டு இலங்கையினுள் ஏதாவதொரு நிறுவனத்துடன் உடன்படிக்கைகளுக்கு அணுகுமுறை மற்றும் அதன் குறிக்கோள் மற்றும் பணிகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக வேறு நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளல்.

அனுசரணை மற்றும் நன்கொடைகள்

32. நிதி சார்பாக அல்லது பொருளுதவி அல்லது வேறு வகையில் அல்லது கொடைகள், நன்கொடைகள், உதவி அல்லது மானியங்கள் வழங்குதல் மற்றும் இச் சாசனத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய அதி- கார சபையின் நோக்குடன் அவற்றை பயன்படுத்துதல்.

சாரதிகள் நடத்து னர்களை சாரதி உதவியாளர்களை மற்றும் பயிற்று வித்தல்

33. சாரதிகள் நடத்துனர்களையும் சாரதி உதவியாளர்களையும் பயிற்றுவிப்பதற்காக மோட்டார் வாகன திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சி பாடசாலையினை ஆரம்பித்தல், பயிற்சி வகுப்புக்களை நடாத்துதல், பின் தொடரல்.

மாகாணத்தின் பேரூந்து தரிப்பி டங்களை நிருவ கித்தல் மற்றும் முகாமைத்துவமும் வேறு அதிகாரங்கள்

34. அதிகார சபைக்கு மாகாணத்தினுள் அமைந்துள்ள பேரூந்துக்களை நிறுத்துமிடங்கள் மற்றும் தெரு போக்குவரத்துக்களை நிறுத்துமிடங்கள் பற்றி கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களை செயற்படுத்த முடியும்.

1. பேரூந்துக்களை நிறுத்துமிடங்கள் மற்றும் தெரு போக்குவரத்து இடங்களை நிறுவுதல், பராமரித்தல்,மூடிவிடுதல், முகாமைத்துவம், அபிவிருத்தி செய்தல், வேறுபடுத்தல், சட்ட ரீதியாக கைப்பற்றுதல்.

2. பேரூந்து நிறுத்துமிடங்களில் பேரூந்து போக்குவரத்து முகாமைத்துவ நடவடிக்கை நேரசூசியினை அமைத்தலுடன் உரிய முகாமைத்துவ நடவடிக்கைக்காக தேவையான அதிகார சபையின் பணிக் குழுவினை ஈடுபடுத்தல் மற்றும் அவர்களின் அதிகாரம் பணிகள் மற்றும் பொறுப்புக்களை விதித்தல் பற்றிய வழிமுறைகளை வழங்குதல், பேரூந்து நிறுத்துமிடங்களில் அதிகார சபையின் பணி குழுவினால் கொண்டு நடாத்த வேண்டிய அறிக்கை மற்றும் ஆவணங்களும் அவற்றில் குறிக்க வேண்டிய தகவல்களை அமைத்தல்.

3. அதிகார சபையினால் நிருவாகம் மற்றும் முகாமைத்துவத்தினை கொண்டு நடாத்துகின்ற பேரூந்து நிறுத்துமிடங்களில் நிருவாகம் மற்றும் போக்குவரத்து சேவை நடவடிக்கைகளுக்கு வெளியாளர்கள் தொடர்புபடுத்திக் கொள்வது பற்றி தீர்மானித்தல் மற்றும் தகவு திறன்களை தீர்மானித்தல்.

4. விடயப் பொறுப்புடைய செயலாளரின் அனுமதிக்கு உட்பட்டு அதிகார சபையின் பணிகளுக்காக ஏதாவதொரு நிலையற்ற சொத்துக்களை விலைக்கு வாங்குதல், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு வழங்குதல் /கைப்பற்றுதல், வெளியேற்றுதல் மற்றும் நிலையான சொத்துக்களை விலைக்கு வாங்குதல், குத்தகைக்கு வழங்குதல் அல்லது வாடகைக்கு வழங்குதல்.

5. இச் சாசனத்தின் கீழ் அதிகார சபையின் அதிகார பணிகள் மற்றும் செயல்களை உரியவாறு நிறைவேற்றல் மற்றும் நிறைவேற்றுவதற்காக தேவை என்று அதிகார சபை எண்ணுகின்ற இச் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வேறு அதிகாரங்களை செயற்படுத்தல்.

## III ஆம் பகுதி
## மாகாண போக்குவரத்துச் சேவை அதிகார சபையின் பணிக்குழு

அதிகார சபையின் முகாமையாளர்

35.

1. அதிகார சபையின் பணிப்பாளர் குழுவினை கௌரவ ஆளுநர் அவர்களினால் அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு செயற்திட்டத்தின் படி அமைச்சர் அவர்களின் எழுத்து மூலமான அனுமதியுடன் அதிகார சபைக்காக முகாமையாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

2. அதிகார சபையின் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும், அதிகார சபையில் பணி புரிகின்றவர்கள் பற்றி நிர்வாக கட்டுப்பட்டும், பணிப்பாளர் குழுவின் பொது அதிகாரத்திற்கு மற்றும் நிருவாகத்திற்கு உற்பட்டு முகாமையாளருக்கு பொறுப்படைக்க வேண்டியதுடன்,

முகாமையாளர் அவ் அதிகாரங்களை பணிப்பாளர் குழுவின் வழிகாட்டல் மற்றும் நிர்வாகத்திற்கு உட்பட்டு செயற்படுத்தல் வேண்டும்.

3. தமது அதிகார பணிகள் அல்லது பணிகளிடையே மாகாண அதிகார சபையின் வேறு ஊழியர்களுக்கு பொறுப்படைக்க தேவை என்று முகாமையாளர் காலத்திற்கு காலம் கருதுகின்ற, அதிகாரப் பணிகள் அல்லது பணியினை அதிகார சபையின் எழுத்து மூலமான அனுமதியுடன் முகாமையாளரினால் எழுத்து மூலம் அச் சேவை ஊழியர்களுக்கு பொறுப்படைக்க முடியும் என்பதுடன், அவ்வாறான அதிகாரம், செயற்பாடுகள் அல்லது பணி அவ்வாறு மாற்றப்பட்ட ஒரு ஊழியரினால் முகாமையாளரின் சாதாரண அல்லது விசேட கட்டளைகளுக்கு உட்பட்டு அவற்றை செயற்படுத்தல் வேண்டும்.

4. அதிகார சபையின் பணிப்பாளர் குழுவினால் முகாமையாளர் பதவியில் இருந்து அகற்றுவதாயின் அமைச்சரின் மேல் அனுமதியினை பெற்றுக் கொள்ள வேண்டும்.

36. (1) அதிகார சபையின் பணிப்பாளர் குழுவினால், *அதிகார சபையின் பணிக் குழுவின் நியமனம் என்பன*

(அ) அதிகார சபையின் பணிகளை நிறைவேற்றுவதற்காக தேவை என்று கருதுகின்ற பணிக் குழுவினை நியமித்தல் மற்றும் அப் பணிக் குழு பற்றி ஒழுக்காற்று நடவடிக்கையினை மேற்கொள்ளல்.

(ஆ) அப் பணிக் குழுவின் சம்பளம் அல்லது வேறு கொடுப்பனவுகளை தீர்மானித்தல்.

(இ) அப்பணிக் குழுவின் நற்பணிக்காக சேமலாப நிதி திட்டத்தினை அமைத்தலும் முறைப்படுத்தல் மற்றும் அவ்வாறான ஏதாவதொரு நிதியத்திற்கு அல்லது ஆலோசனைகள் அல்லது திட்டத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்த வேண்டும்.

(2) வடமேல் மாகாண அரச சேவையில் எந்தவொரு உத்தியோகத்தரும் அதிகார சபையில் தற்காலிக அல்லது நிரந்தர பதவிக்கு நியமிப்பதற்கு தேவை என்று அதிகார சபையினால் தீர்மானிக்கின்ற சந்தர்ப்பத்தில், உரிய உத்தியோகத்தரின் விருப்பமும் / உரிய நியமன அதிகாரியின் மற்றும் வடமேல் மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் அனுமதியுடன் நியமிக்க முடியும்.

(3) அதிகார சபையின் கோரிக்கைப்படி அரச சேவையில் எந்தவொரு உத்தியோகத்தரும் அவ் உத்தியோகத்தரினதும், அவ் உத்தியோகத்தர் பதவியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது ஏதாவதொரு அமைச்சினாலா அல்லது அமைச்சின் கீழா அந்த அமைச்சின் செயலாளரினாலா அரச நிருவாக அமைச்சின் செயலாளரினது விருப்பத்துடன், பணிப்பாளர் குழுவினால் அவ்வாறான விருப்பத்துடன், நிச்சயிக்கப்படும் காலத்திற்காக அதிகார சபையின் பணிக் குழுவிற்கு தற்காலிகமாக நியமிக்க முடியும். இல்லாவிட்டால் அவ்வாறான விருப்பத்துடன் அப் பணிக்குழுவிற்கு நிரந்தரமாக நியமிக்க முடியும்.

(4) குறித்த காலத்தினுள் அரசிற்கு அல்லது மாகாண சபைக்கு பணியாற்றுவதற்கு இணங்கி அரச அல்லது மாகாண சபையுடன் உடன்படிக்கைக்கு உள்ளாகும் ஒருவர், அதிகார சபையினால் சேவையில் ஈடுபடுத்தப்படும் சந்தர்ப்பத்தில், குறித்தவர் அதிகார சபைக்கு சேவை செய்கின்ற குறித்த சேவை காலம் அரசின் அல்லது மாகாண சபையின் இணக்கத்துடன், அவ் உடன்படிக்கையின் ஒப்பந்தத்தினை நிறைவேற்றும் பணிக்காக அரசிற்கு அல்லது அம்மாகாண சபைக்கு செய்யப்படும் சேவையாக கருதப்படும்.

## IV ஆம் பகுதி
## நிதி

37. (1) அதிகார சபைக்கு "வடமேல் மாகாண பயணிகள் போக்குவரத்து சேவை நிதியம்" பெயரினால் நிதியம் இருத்தல் வேண்டும். *அதிகார சபையின் நிதியம்.*

(2) அதிகார சபையின் நிதியத்திற்கு கீழ் காணப்படும் நிதி செலுத்த வேண்டும்.

(அ) பயணிகள் போக்குவரத்து சேவை உரிமப்பத்திரம் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல் மூலம் அறவிடப்படும் நிதி மற்றும் சொந்த அதிகாரச் செயற்பாடுகள் மற்றும் பணிகளை செயற்படுத்தும் போது மற்றும் நிறைவேற்றும் போது மாகாண சபை அதிகார சபைக்கு கிடைக்கின்ற அனைத்து நிதிகளும்,

(ஆ) வடமேல் மாகாணத்தின், மாகாண சபையினால் கிடைக்கின்ற ஒதுக்கீடுத் தொகை உற்பட அதிகார சபையின் நிதியத்திற்கு வைப்பில் இடப்படும் அனைத்து நிதிகளும்,

(3) இந் நிதியம் உரியவாறு நிர்வகித்தல் மற்றும் கணக்கில் வைப்பிலிடல் பொது முகாமையாளருடைய பொறுப்பாகும். இந் நிதியத்தினை உரியவாறு நிர்வகித்தல் மற்றும் கணக்கில் வைப்பிலிடலுக்கான அதிகாரம் பணிக் குழுவிற்கு பொறுப்பளிப்பதற்கு பொது முகாமையாளருக்கு இயலுமை உண்டு.

(4) இச்சாசனம் மற்றும் வேறு ஏதாவதொரு எழுத்து மூலமான சட்டத்தின் கீழ் மாகாண அதிகார சபையின் நடவடிக்கை முகாமைத்துவம் செய்தல் அதிகார சபையின் உறுப்பினர்களுக்கு மற்றும் அதிகார சபையில் பணியாற்றுகின்றவர்களுக்கு ஊதியம் செலுத்துதல் மாகாண அதிகார சபையின் அதிகாரம் செயற்படுத்தல் மற்றும் பணி மற்றும் செயல்களை நிறைவேற்றல் பற்றி செய்யப்படும் ஏதாவதொரு செலவினை செலுத் துவதற்காக மற்றும் காலத்திற்கு காலம் அதிகார சபையினால் அதிகாரம் வழங்கப்படும் வேறு பணிகளுக்காக மாகாண அதிகார சபையினால் அதிகார சபையின் நிதியினை பயன்படுத்தலாம்.

*அதிகார சபையில் கடன் எடுக்கும் அதிகாரம்*

38. இச் சாசனத்தின் கீழ், வடமேல் மாகாண போக்குவரத்து சேவை அதிகார சபையின் பணிகளை நிறைவேற்றும் போது தமது பொறுப்பினை நிறைவேற்றுவதற்காக அதிகார சபைக்கு தேவையாகின்ற நிதி, மாகாண சபையின் விடயப் பொறுப்புடைய அமைச்சரின் செயலாளரின் பரிந்துரை மற்றும் நிதி விடயப் பொறுப்புடைய அமைச்சின் செயலாளரின் அனுமதியுடன் அல்லது அவரினால் வழங்கப்படும் பொது அனுமதிக்கு அமைய வடமேல் மாகாண சபை நிதியத்தில் அல்லது அரச வங்கி மிகைப்பற்று மூலம் அல்லது அதிகார சபையினால் கடனுக்கு எடுக்க முடியும்.

*அதிகார சபையின் கணக்கு*

39.

(1). போக்குவரத்து சேவை அதிகார சபையின் நிதி ஆண்டு நாட்காட்டி ஆண்டாக அமைய வேண்டும்.

(2). மாகாண அதிகார சபையின் வருமானம் மற்றும் செலவு, சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் வேறு கொடுக்கல் வாங்கள் தொடர்பாக குறித்த கணக்கு புத்தகங்களில் இடுவதற்கு அதிகார சபையினால் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

(3). அதிகார சபையினால் நிறைவேற்றப்பட்ட பணிகள் பற்றி ஆண்டறிக்கை ஒன்றினை அதிகார சபையினால் ஒழுங்கமைத்தல் வேண்டும்.

(4). அதிகார சபையின் ஆண்டறிக்கை மற்றும் கணக்காய்வறிக்கை அமைச்சரினால் குறித்த நிதி ஆண்டு கடந்து 06 மாதங்கள் கடப்பதற்கு முன்பு மாகாண சபையில் சபைக்குற்படுத்தல் வேண்டும்.

(5). 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைச் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் படி மாகாண சபை நிதியம் கணக்காய்வு செய்தல் மற்றும் கணக்கு பற்றி அரசியலமைப்புச் சட்டத்தின் 154 ஆம் சட்டத்தினை தொடர்புபடுத்திக் கொள்ள வேண்டும்.

## V ஆம் பகுதி

### பொது விதிகள்

*சாசனத்தின் கீழ் ஆணைகளை ஒழுங்கமைத்தல்.*

40. (1). அமைச்சரினால் இச் சாசனத்தின் சட்டதிட்டங்களை நடைமுறைப்படுத்தப்படும் மற்றும் அதிகாரப்படுத்தும் பணிக்காக இச் சாசனத்தினால் அதிகாரம் வழங்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட அனைத்து விடயங்களும் அல்லது இதில் ஏதாவதொரு விடயங்களுக்காக அமைச்சரினால் ஆணை இட முடியும்.

(2). மேலே 40(1) உட் பிரினால் வழங்கப்படுகின்ற அதிகாரம் பொதுத்தன்மைக்கு பாரபட்சம் ஏற்படாத வகையில் அமைச்சரினால் கீழ் காணப்படும் அனைத்து அல்லது ஒவ்வொரு விடயம் பற்றி கட்டளைகளை ஒழுங்கமைக்கலாம்.

(அ) இச் சாசனத்தின் கீழ் கட்டளைப் பிறப்பிப்பதற்காக குறித்த அல்லது அதிகாரம் வழங்கப் படுகின்ற அனைத்து விடயங்களும்.

(ஆ) உரிமப்பத்திரம் மற்றும் வேறு அங்கீகாரம் வழங்குதல், புதுப்பித்தல், திருத்தியமைத்தல், உரிமையினை முறைப்படுத்தல் மற்றும் அதற்கு இடைநேர்விளைவான நடவடிக்கைகளில் பின்பற்ற வேண்டிய பணித்திட்டம் மற்றும் உபயோகிக்கப்பட வேண்டிய முறை பற்றிய மாதிரிப் படிவம் மற்றும் செலுத்தப்பட வேண்டிய கட்டணத்தினை விதித்தல்.

(இ). பாதைகளின் தகுதி மற்றும் உபயோகத்திற்கமைய உரிய பாதைகளின் கட்டணத்திற்கமைய பயணிகள் போக்குவரத்திற்காக உபயோகிக்கப்பட வேண்டிய மோட்டார் வாகனத்தினை நிர்ணயித்தல் மற்றும் உரிய மோட்டார் வாகனத்தினை உபயோகிக்கும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை விதித்தல்.

(ஈ). உரிமப்பத்திர அதிகாரத்தின் கீழ் ஈடுபடுத்தப்படுகின்ற வாகனத்தின் சாரதி, நடத்துனர், சாரதி உதவியாளர் அல்லது வாகனத்திற்கு பொறுப்புடையவரினால் கொண்டு செல்ல வேண்டிய ஆவணங்கள் மற்றும் அவற்றினுள் உட்படுத்த வேண்டிய மற்றும் உட்படுத்த வேண்டிய விபரங்கள்,

(உ) சட்டரீதியான போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின் கீழ் ஈடுபடுத்தப்படுகின்ற பேரூந்துகளின் பயண நேரங்கள் பற்றி வைத்திருக்க வேண்டிய அறிக்கை,

(ஊ) உரிமப்பத்திரம் ஒன்றின் அதிகாரத்தின் கீழ் ஈடுபடுத்தப்படுகின்ற வாகன அனுமதிப்பத்திரம் ஒன்றின் அதிகாரத்தின் கீழ் ஈடுபடுத்தப்படுகின்ற வாகனம் ஒன்றினை பாவனை செய்கின்றவர்களினால் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள்.

(எ) சட்டரீதியான பயணிகள் மற்றும் போக்குவரத்துச் சேவை உரிமப்பத்திரத்தினை வைத்திருப்பவர்களினால் உரிமப் பத்திரங்களின் அதிகாரத்தின் கீழ் ஈடுபடுத்தப்படுகின்ற பேரூந்துகளின் சாரதிகள், நடத்துனர்கள் மற்றும் சாரதி உதவியாளர்களாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளவர்கள் பற்றியும் அவர்கள் சேவையினை ஆரம்பிக்கின்ற மற்றும் முடிவுறுகின்ற நேரம் மற்றும் அவர்களினால் எடுக்கப்படுகின்ற ஓய்வு நேரங்கள் பற் றி அந்த உரிமப்பத்திரத்திரதாரியினால் வைத்திருக்க வேண்டிய அறிக்கை,

(ஏ) அவ்வாறு வைத்திருக்கின்ற அறிக்கையினை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டியதுடன், அதிகார சபையினால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவர் அறிக்கையினை கோரும் சந்தர்ப் பத்தில் அவ் அறிக்கையினை பரிசீலிப்பதற்காக சமர்ப்பித்தல்.

(ஐ) உரிமப்பத்திரங்களில் பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்படுகின்ற சாரதிகள், நடத்துனர்கள் மற்றும் சாரதி உதவியாளர்களை பதிவு செய்தல், அப் பதிவினை புதுப்பித்தல், இரத்து செய்தல் மற்றும் இடைநிறுத்துதல் பற்றிய பணி நடைமுறையினை செயற்படுத்தல்.

(ஒ) அதிகார சபையின் பணிகள் மற்றும் நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்தல் மற்றும் பயணிகளை கொண்டு செல்வதற்கான சேவையில் ஈடுபடுத்தப்படுகின்ற எல்லா சேவையாளர்களுக்கும் உரிய குறைந்தபட்ச ஊதியமும் விடுமுறை மற்றும் பணியாளர்களின் சலுகைகள் பற்றி

(ஓ) உரிமப்பத்திரங்கள் அதிகார சபையின் கீழ் சட்டரீதியாக பயணிகளை போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தப்படுகின்ற வாகனங்களது சாரதிகள் மற்றும் நடத்துனர்களினால் அணிந்து இருக்க வேண்டிய சீருடை மற்றும் சின்னத்தினை நிர்ணயித்தல், அவ் வாகனங்களின் சாரதி, சாரதி உதவியாளர் மற்றும் நடத்துனர் பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தப்படும் சந்தர்ப்பங்களில் அவர்களினால் பின்பற்ற வேண்டிய ஒழுக்காற்று விதிகளை வரையறுத்தல்.

(ஔ) விசேடமாக பேரூந்து போக்குவரத்தினை ஒன்றிணைத்தல் மற்றும் நேரங்களை பதிவு செய்தலும் வசதிகளை உரியவாறும் சாதாரணமாகவும் வழங்குவதற்காக பேரூந்து நிறுத்துமிடங்கள், பேரூந்து தரிப்பிடங்கள் மற்றும் போக்குவரத்து நிறுத்துமிடங்களை முகாமைத்துவம் செய்தல் சம்பந்தமாக,

(க) மாகாணத்தினுள் பயணிகள் போக்குவரத்து உரிமப்பத்திரம் அல்லது ஏதாவதொரு அதிகார சபை அதிகாரத்தின் கீழ் போக்குவரத்து செய்கின்ற பாடசாலை வேன், வாடகை வாகனங்களுக்காக வேறு சட்டத்தின் கீழ் பயணிகள் போக்குவரத்து சேவைக்காக அறவிடப்பட வேண்டிய கட்டணத்தினை விதித்தல், உறுதிப்படுத்தல் மற்றும் அவற்றை திருத்தியமைத்தல்.

(ச) சட்டரீதியான பயணிகள் போக்குவரத்து சேவை மற்றும் விசேட பயணிகள் போக்குவரத்து சேவை உரிமப்பத்திரங்களின் அதிகாரத்தின் கீழ் ஈடுபடுத்தப்படுகின்ற சாரதிகள், சாரதி உதவியாளர்களின் மற்றும் நடத்துனர்களின் அதிகபட்ச தகைமையினை விதித்தல் மற்றும் அவர்களின் உடல்நலம் மற்றும் உளவியல் காலத்திற்கு காலம் பரிசோதனைக்கு உற்படுத்தல்.

(த) மாகாணங்களுக்கு இடையிலான உரிமப்பத்திரதாரிகள் பேரூந்துகள் வடமேல் மாகாணத்-தினுள் பயணிகள் போக்குவரத்தின் போது பின்பற்ற வேண்டிய நடவடிக்கை மற்றும் கட்டணம் அறவிடல் பற்றிய ஒழுங்குவிதிகள்.

(3) இங்கு 40(1) ஆம் உப பிரிவின் கீழ் அமைக்கப்படுகின்ற அனைத்து கட்டளைகளும் வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டியதுடன், அவ்வாறு பிரசுரிக்கப்பட்ட தினம் அல்லது கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ளவை பின்னர் உள்ள திகதியிலோ செயற்படுத்தப்படும்.

(4) இங்கு (1) ஆம் உப பிரிவின் கீழ் அமைக்கப்படுகின்ற அனைத்து கட்டளைகளும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பின்பு இயன்றளவு அவசரமாக அனுமதிக்காக மாகாண சபைக்கு சமர்பிக்க வேண்டியதுடன், அவ்வாறு சமர்பிக்கப்பட்டதன் பின்பு அனுமதிக்கப்படாத ஏதாவதொரு கட்டளை இருப்பின் அதன் கீழ் முன்பு செய்யப்பட்ட செயற்பாட்டுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாதவாறு அனுமதிக்கப்பட்ட திகதி தொடக்கம் அக் கட்டளையினை அதிகாரமற்று போனதாக கருதப்பட வேண்டும்.

(5) ஏதாவதொரு கட்டளை ஒன்றினை அவ்வாறு அதிகாரமற்று போனதாக கருதப்படும் திகதியினை வர்த்தமானியில் பிரசுரித்தல் வேண்டும்.

தெரு பயணிகள் போக்குவரத்து சேவை சாசனத்தினை இரத்து செய்தல்.

41. இச் சாசனம் செயற்படுத்தப்படும் திகதி தொடக்கம் வடமேல் மாகாண மாகாண சபையின் 1995 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வடமேல் மாகாணத்தின் தெருப் பயணிகள் போக்குவரத்துச் சேவைச் சாசனம் இரத்துச் செய்யப்படும்.

## VI ஆம் பகுதி

### சாதாரண விதிகள்

கட்டளைகளை வழங்குவதற்கு அமைச்சருக்கு உள்ள அதிகாரம்.

42. (1) அதிகார சபையினால் அதன் அதிகாரங்களை செயற்படுத்துவது பற்றி அமைச்சரினால் அதிகார சபைக்கு காலத்திற்கு காலம் பொது அல்லது விசேட விதிகளை வழங்கப்பட வேண்டியதுடன் அதிகார சபையினால் அவ்விதிகளை செயற்படுத்தல் வேண்டும்.

(2). அதிகார சபையின் நடவடிக்கை பற்றி தம்மால் விதிக்கப்படுகின்ற மாதிரிப் படிவத்தினால் தம்மிடத்தில் கால அறிக்கை கணக்கு மற்றும் வேறு தகவல்களை வழங்குமாறு அமைச்சரினால் காலத்திற்கு காலம் அதிகார சபைக்கு கட்டளை இட முடிவதுடன் அதிகார சபையினால் அவ் அனைத்து கட்டளைகளையும் நிறைவேற்ற வேண்டும்.

வாகனத்திற்கு பிரவேசித்தல் மற்றும் தேடுதல்.

43. அதிகார சபையினால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவரினாலும் எந் நேரத்திலாவது வடமேல் மாகாணத்தினுள் எந்த இடத்திலாவது,

(1). பயணிகளை ஏற்றி செல்வதற்கான சேவையில் ஈடுபடுகின்ற எந்தவொரு மோட்டார் வண்டியினையும் அதற்கான அதிகாரம் இச் சாசனத்தின் கீழ் அல்லது வேறு நிறுவனங்களினால் கிடைக்கப் பெற்றுள்ளதா என்று அவ் உரிமப்பத்திரற்கு உரிய நிபந்தனைகளை கொண்ட உரிய வாகனத்தின் சாரதி, நடத்துனர், சாரதி உதவியாளர் அல்லது பொறுப்பாக உள்ளவரினால் பின்பற்றி உள்ளாரா என்பது சாசனத்தின் விதிகள் அல்லது கட்டளைகளை பின்பற்றி உள்ளாரா என்று தெரிந்துக் கொள்வதற்காக உரிய வாகனத்திற்கு உள்ளே பிரவேசித்தல் அல்லது வாகனத்தினை பரிசோதிக்க முடியும்.

(2). பயணி ஏற்றி செல்வதற்காக உரிய வாகனத்திற்கு அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ள உரிமப்பத்திரத்தை சமர்பிக்குமாறு உரிய வாகனத்தின் சாரதிக்கு, நடத்துனருக்கு அல்லது சாரதி உதவியாளருக்கு அல்லது பொறுப்பாக உள்ளவருக்கு கட்டளையிடலாம்.

(3). அந்த உரிமப்பத்திரம் அல்லது வேறு ஆவணங்கள் அல்லது அதன் பிரதி ஒன்றினை தமது பொறுப்பிற்கு எடுக்க முடியும்.

(4). மோட்டார் வாகன திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற சாரதி உரிமப்பத்திரம் ஆண்டு வருமான உரிமப்பத்திரம் உரியதென்று எண்ணுகின்ற வேறு ஆவணங்களை பரிசீலிக்க முடியும்.

*வழக்கு தொடருவதனால் பாதுகாப்பு.*

44. (1). (அ) அதிகார சபையினால் இச் சாசனத்தின் கீழ் செய்யப்பட்ட அல்லது செய்வதாக சொல்லப் படுகின்ற அல்லது ஏதாவதொரு செயற்பாடு பற்றி அதிகார சபைக்கு எதிராக அல்லது,

(ஆ) அதிகார சபையின் எந்த ஒரு உறுப்பினரினால் உத்தியோகத்தரினால் அல்லது பணியாள ரினால் இச் சாசனத்தின் அதிகாரத்தின் கீழ் அல்லது அதிகார சபையினால் செய்யப்பட்டதாக கூறுகின்ற ஏதாவதொரு செயற்பாடு தொடர்பாக அந்த உறுப்பினருக்கு, உத்தியோகத்தருக்கு அல்லது பணியாளருக்கு எதிராக எவ்வித சிவில் வழக்கும் தொடரக் கூடாது.

(2). அதிகார சபைக்கு எதிராக ஏதாவதொரு சிவில் வழக்கின் போது அதிகார சபையினால் ஏற்கப்பட்ட செலவினை அதிகார சபையின் நிதியத்தில் இருந்து செலுத்த வேண்டும். அவ்வாறான சிவில் வழக்கினால் அதிகார சபையினால் அறவிடப்படுகின்ற ஏதாவதொரு செலவு அல்லது நட்டஈடு அதிகார சபையின் நிதியத்திற்கு வரவு வைத்தல் வேண்டும். உரிய குற்றத்திற்கு உடந்தையான உத்தியோகத்தர் இச் சாசனத்தின் அல்லது அதிகார சபையினால் விதிக்கப்பட்ட சட்டம் / ஒழுங்குவிதிகளை மீறிய சந்தர்ப்பத்தில் அவர் அது தொடர்பாக தனிப்பட்ட முறையில் பொறுப்பு கூற வேண்டியதுடன், உரிய தொகையினை அதிகார சபையின் நிதியத்தினால் செலுத்துவது பற்றி தீர்மானிக்கும் அதிகாரம் பணிப்பாளர் குழுவிற்கு உரியதாகும்.

*நிலைய சேவைக் கட்டணம்*

45. (1) அதிகார சபையினால் அதிகாரம் வழங்கப்பட்ட எந்த ஒரு உத்தியோகத்தரினாலும் அல்லது இச் சாசனத்தின் கீழான உரிமப்பத்திரம் ஒன்றினை அதிகார சபையின் கீழ் பயணிகள் செல்கின்ற மோட்டார் வண்டிக்கு உரியதான இச் சாசனத்தில் குறித்த சட்டத்திட்டங்களை மீறுகின்ற சந்தர்ப்பத்தில் அந்த மீறுதல் தொடர்பான பொறுப்பினை தமது சொந்த விருப்பத்துடன் ஏற்றுக் கொள்ளும் நபரினால் உரிய மீறுதல் தொடர்பாக வழக்கு தொடர்வதற்கு பதிலாக செல்லுபடியாக காணப்படுகின்ற ஆகக் கூடிய நிலைய சேவைக் கட்டணத்திற்கு உற்பட்டு சேவைக் கட்டணம் விதிக்கப்படலாம். அது பற்றிய அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரினால் அல்லது உரிய உத்தியோகத்தரினால் தகுந்த வகையில் போக்குவரத்து வழியினை மற்றும் மோட்டார் வண்டியின் இலக்கத்துடனும் அதிகார சபைக்கு அறிவித்தல் வேண்டும்.

(2). அவ்வாறான நிலையச் சேவைக் கட்டணம் அதிகார சபையிடத்தில் அல்லது அதிகார சபையின் உப அலுவலகத்திற்கு அதிகார சபையின் நிதியத்திற்கு வரவில் வைக்கும் வகையில் செலுத்தி செலுத்தப்பட்டதற்கான சாட்சியாக குற்றத்தினை கண்டுபிடிக்கப்பட்ட திகதி தொடக்கம் இரண்டு வாரத்தினுள் உரிய பற்றுச் சீட்டினை அதிகார சபைக்கு சமர்பித்தல் வேண்டும்.

*போக்குவரத்து உரிமப் பத்திரத்தினை காட்சிப்படுத்தல் வேண்டும்.*

46. இச் சாசனத்தின் கீழ் வழங்கப்படுகின்ற அனைத்து உரிமப்பத்திரங்களும் உரிமப் அந்த வழங்கப்பட்ட மோட்டார் வண்டியில் பாதுகாப்பாக பத்திரத்தினை இருக்க வேண்டியதுடன், பயண உரிமப்பத்திரத்தின் போட்டோ பிரதி ஒன்றினை காட்சிப்படுத்தல் வாகனத்தின் கண்ணாடியில் தெளிவாக தெரியும் வகையில் வேண்டும்.

பேரூந்து வண்டியினை விலைக்கு வாங்குவதற்காக பரிந்துரைத்தல்.

47. பயணிகள் போக்குவரத்து சேவையின் குறைபாட்டினை கருத்தில் கொண்டு பொருத்தமான சந்தர்ப்பத்தில் பொது அரச கொள்கைகளுக்கு அமைய விலைக்கு பேரூந்து வண்டிகளை விலைக்கு வாங்குவதற்காக வசதிகள் மற்றும் வரிச் சலுகை வழங்குவதற்காக அதிகார சபையினால் பரிந்துரை வழங்க முடியும்.

## VII ஆம் பகுதி

### குற்றங்களும் தண்டனைகளும்

குற்றம் மற்றும் தண்டனை.

48. (1). அதிகார சபையினால் அல்லது வேறு ஏதாவதொரு நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட பயணிகள் போக்குவரத்து சேவை உரிமப்பத்திரம் அதிகார சபையின் கீழ் வடமேல் மாகாணத்தினுள் பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடுத்தப் படுகின்ற பேரூந்துகளில் பயணிக்கின்ற,

(அ) தம்மிடத்தில் இருந்து அறவிடப்பட வேண்டிய கட்டணத்தினை செலுத்தத் தவறுகின்ற அல்லது,

(ஆ) உரிய இடத்திற்கு வருகைத் தந்த போது பேரூந்தில் இருந்து இறங்காது வேண்டுமென்றே நிராகரிக்கின்ற அல்லது தவறுகின்ற அல்லது,

(இ) எவர் ஒருவருக்கு அழுத்தமுடைய அல்லது அவமதிப்புடைய ஏதாவதொரு விதத்தில் ஆபாசமான, அசிங்கமான அல்லது உணர்ச்சி வேகத்துடனான மொழியில் அல்லது சைகைகளினால் அல்லது நடத்தையினை மேற்கொள்கின்ற அல்லது செயல்படுகின்ற பயணி ஒருவர் இச் சாசனத்தின் கீழ் குற்றம் புரிவதுடன், அக் குற்றத்தினை புரிகின்ற பயணியிடத்தில் இருந்து அறவிடப்பட வேண்டிய கட்டணத்தினை விட இருமடங்கும் ஆயிரம் ரூபா (1000.00 ரூபா) நிலைய அபராதத்தினையும் அப் பயணி செலுத்த வேண்டும்.

(2) (அ) அதிகார சபையினால் அல்லது வேறு நிறுவனங்களினால் வழங்கப்பட்ட ஏதாவதொரு உரிமப்பத்திரத்தில் பயணிக்கின்ற பேரூந்தின் போக்குவரத்து உரிமப்பத்திரம் அல்லது பிரவேசப்பத்திரம் இன்றி போக்குவரத்து செய்கின்ற அல்லது,

(ஆ) அப் பயண வழிப்பாதைக்காக தமக்கு வழங்கப்பட்ட டிக்கட்டினை பயணம் தொடங்கி இறுதிவரையில் தம்மிடத்தில் வைத்திருக்காத அல்லது

(இ) அப் பேரூந்துவின் நடத்துனரினால் அல்லது அச்சந்தர்ப்பத்திற்காக அதிகார சபையி-னால் அதிகாரம் வழங்கப்பட்ட வேறு ஒருவரினால் கோரும் போது அந்த டிக்கட்டினை காட்டுவது அல்லது பொறுப்படைக்காதிருத்தல் அல்லது நிராகரிக்கின்ற எந்த ஒரு பயணி, இச் சாசனத்தின் கீழ் குற்றம் புரிவதுடன், அக் குற்றத்திற்கு பயணியிடத்தில் இருந்து அறவிடப்படும் கட்டணத்தினை விட இருமடங்கும் மற்றும் ஆயிரம் ரூபா (ரூ.1000.00) நிலைய அபராதத்தினை அதிகார சபையினால் அதிகாரத்தினை வழங்கியுள்ள எந்த ஒரு உத்தியோகத்தரிடத்திலும் செலுத்த முடியும்.

(3) (அ) அதிகார சபையின் அனுமதியுடன் வழங்கப்படுகின்ற டிக்கட்டினை அல்லது அனுமதிப் பத்திரத்தை மோசடியாக பயன்படுத்துகின்ற அல்லது அதற்காக வேறு ஒருவருக்கு இடமளிக்கின்ற எவர் ஒருவருக்கும்,

(ஆ) அவ்வாறான டிக்கட்டினை அல்லது அனுமதிப்பத்திரம் ஒன்றினை மோசடியாக உபயோகிக்கின்ற, தன்மையினை மாற்றுகின்ற, சிதைக்கின்ற அல்லது அழிக்கின்ற எவர் ஒருவருக்கும்,

(இ) அவ்வாறான டிக்கட்டினை அல்லது அனுமதிப்பத்திரத்தினை அதிகார சபையின் அனுமதி இன்றி விற்பனை செய்கின்ற அல்லது வழங்குகின்ற அல்லது விநியோகிக்கின்ற எவர் ஒருவரும்,

(ஈ) அனுமதி இன்றி அவ்வாறான டிக்கட்டினை அச்சிட்டதாகக் கருதுகின்ற அல்லது உபயோகித்த ஏதாவதொரு டிக்கட்டினை அச்சிடுகின்ற எவர் ஒருவரும்,

(உ) பேரூந்தில் பயணிக்கின்ற பயணி ஒருவருக்கு நுழைவுச் சீட்டை வழங்காது இருப்பது அல்லது மறுக்கும் நடத்துனர் என்பவருக்கு

(ஊ) பேரூந்தில் செல்லுபடியாகும் டிக்கட் பத்திரத்துடன் பயணிக்கின்ற பயணிக்கு மன அழுத்தமுடைய அல்லது அவமதிக்கின்ற ஏதாவதொரு வகையில் ஆபாசமான அசிங்கமான அல்லது ஆவேசத்துடன் அல்லது அசைவு அல்லது நடத்தையில் ஈடுபடுகின்ற அல்லது செய்கின்ற உரிய பேரூந்து வண்டியின் சாரதி ஒருவர் அல்லது நடத்துனர் என்ற ஒருவருக்கு,

(எ) பயணிகளை கொண்ட செல்கின்ற பேரூந்தின் உள்ளே ஒலி பெருக்கி அல்லது உபகரணங்களின் சத்தத்தின் அளவு அதிகார சபையினால் விதிக்கப்படுகின்ற சப்தத்தின் அளவிற்கு மேற்படுகின்ற சந்தர்ப்பத்தில் உரிய பேரூந்தில் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் சாரதி அல்லது நடத்துனர் ஒருவருக்கு,

(ஏ) சாரதி ஒருவர் அல்லது நடத்துனர் ஒருவர் அல்லது சாரதி உதவியாளராக உரியவாறு அதிகார சபையில் பதிவு செய்யப்படாது அல்லது அவ்வாறு பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் அப் பதிவினை இரத்து செய்யும் சந்தர்ப்பத்தில் அதிகார சபையினால் வழங்கப்பட்ட உரிமப்பத் திரத்தின் கீழ் பயணிகளின் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற எவர் ஒருவரும்,

(ஐ) அதிகார சபைக்குரிய பேரூந்து தரிப்பிடத்தில் அமைந்துள்ள அல்லது வேறு இடத்தில் அமைந்துள்ள கட்டிடத்தில் அல்லது பயணிகளின் பாதுகாப்பு இடங்களில் அதிகார சபையின் அனுமதி இன்றி விளம்பரங்களை காட்சிப்படுத்துகின்ற அறிவித்தல்களை ஒட்டுகின்ற அல்லது எழுத்து, வசனங்கள், சொற்களை எழுதுதல் அல்லது உருவம் அல்லது புகைப்படம் அல்லது வேறு குறிகளை வரைந்து அறிவித்தல்களை காட்சிப்படுத்துகின்ற மற்றும் எவ்வகையிலாவது வேண்டும் என்றே அசுத் தப் படுத்துகின்ற எவர் ஒருவர்,இச் சாசனத்தின் கீழ் குற்றம் செய்வதுடன், நீதவான் ஒருவரினால் குற்றவாளியாக காணப்பட்ட போது ஆயிரம் ரூபாவிற்கு (ரூ.1000.00) குறையாத மற்றும் இருத்தையாயிரம் ரூபாவிற்கு (ரூ.25000.00) மேற்படாத அபராத தொகைக்கு அல்லது ஆறு மாதத்திற்கு மேற்படாத காலத்திற்கு சிறைத் தண்டனை அல்லது அபராதம் மற்றும் சிறைத் தண்டனை ஆகிய இரு தண்டனைக்குமோ உள்ளாதல் வேண்டும்.

(4). மேற்கூறப்பட்ட (1),(2),(3) உப பிரிவுகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் தவிர இச் சாசனத்தில் விதிகள் அல்லது அதன் கீழ் அமைக்கப்பட்ட கட்டளைகளுக்கு இணங்கி செயற்படுவதற்கு தவறுகின்ற எவர் ஒருவரும் குற்றத்திற்கு குற்றவாளியாவதுடன் நீதவானினால் அவ்வாறு குற்றவாளியாக்கப்படும் போது ஆயிரத்தி ஐந்நூறு ரூபாவிற்கு (ரூ.1500.00) குறையாத மற்றும் இருபத்தையாயிரம் ரூபாவிற்கு (ரூ.25000.00) மேற்படாத அபராதத்திற்கு அல்லது ஆறு மாதத்திற்கு மேற்படாத காலத்திற்கு சிறைத் தண்டணை வழங்குவதற்கு அல்லது இரண்டு தண்டனைக்குமே உட்படுதல் வேண்டும்.

குற்றவாளிகளை கைது செய்தல்.

49. இச் சாசனத்தில் (1)(2)(3)(4) ஆம் உப பிரிவுகளின் கீழ் தண்டனை வழங்க வேண்டிய குற்றம் புரிகின்ற எவர் ஒருவரையும் பொலிஸ் உத்தியோகத்தரினால் சட்டரீதியாக கைது செய்ய இயலுமானதுடன், அவ்வாறு கைது செய்தவரை உடனடியாக சட்டத்திற்கமைய செயற்படுவதற்காக நீதவான் முன் கொண்டுவருவதற்கு செயற்படுதல் வேண்டும்.

தவறான அறிக்கை சமர்ப்பித்தல்

50. தெரிந்துக் கொண்டே தவறான அல்லது போலியான விபரங்களடங்கிய அறிக்கை ஒன்றினை எழுத்து மூலமான தகவல் அல்லது எழுத்து மூலமான விடயங்களை தெளிவுப்படுத்தல் அதிகார சபைக்கு அல்லது அதிகார சபையினால் அதிகாரம் பெற்றுள்ள ஒருவருக்கு சமர்பிக்கின்ற நபர் இச் சாசனத்தின் கீழ் குற்றம் புரிந்தவராவதுடன், அது பற்றி நீதவான் முன்னிலையில் வழக்கு விசாரணையின் போது குற்றவாளியாகும் சந்தர்ப்பத்தில் ஐயாயிரம் ரூபா (ரூ.5000.00) இற்கு குறையாத மற்றும் ஐம்பதாயிரம் ரூபா (ரூ.50000.00) இற்கு மேற்படாத அபராதத்திற்கு அல்லது ஒரு ஆண்டிற்கு மேற்படாத காலத்திற்கு சிறைத் தண்டனைக்கு அல்லது உரிய அபராதம் மற்றும் சிறைத் தண்டனை ஆகிய தண்டனை இரண்டிற்குமே உட்படுதல் வேண்டும்.

*நிலையக்கட்டணம் செலுத்தாத போது தண்டனை.*

51. இச் சாசனத்தில் ஏதாவதொரு கட்டளை அல்லது அதன் கீழ் விதிக்கப்பட்டு வெளியிடப்பட்ட அல்லது வழங்கப்பட்ட அல்லது வழங்கப்படுவதற்கான ஏதாவதொரு கட்டளை, சட்டத்தினால் நிலைய அபராதத்தை செலுத்துவதற்கு தவறுகின்ற, மீறுகின்ற அல்லது செயற்படாத எவர் ஒருவரும் இச் சாசனத்தின் கீழ் குற்றம் புரிந்தவராவதுடன், அது பற்றி நீதிவான் முன்னிலையில் வழக்கு விசாரணையின் போது குற்றவாளியாகும் சந்தர்ப்பத்தில் ஆயிரத்தி ஐந்நூறு ரூபாவிற்கு (ரூ.1500.00) குறையாத ஐயாயிரம் ரூபாவிற்கு (ரூ.5000.00) மேற்படாத அபராதத்திற்கு அல்லது ஆறு மாதத் திற் கு மேற்படாத காலத்திற்கு சிறைத் தண்டனைக்கு அல்லது உரிய அபராதமும் சிறைத் தண்டனை ஆகிய இரண்டிற்கும் உட்படுத்தல் வேண்டும்.

*வழக்கு தொடர்வதற்காக அதிகாரம் வழங்குதல்.*

52. இச் சாசனத்தின் கீழான குற்றம் சம்பந்தமாக வழக்கு தொடரும் அலுவலுக்காக அதிகார சபையினால் ஆவணம் மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் அல்லது பணியாளர் அதிகார சபையின் உத்தியோகத்தராக கவனத்தில் கொள்ள வேண்டும்.

*பேரூந்து நிலை யங்கள் அல்லது நிறுத்தும் இடங் களில் அங்கீகாரம் இன்றி பயணிகளை ஏற்றுதல்.*

53. பேரூந்து நிலையங்களில் அல்லது பேரூந்து நிறுத்தும் இடங்களில் இருந்து அங்கீகாரமின்றி பயணிகளை ஏற்றுவது அதற்கு உதவுவதற்கு பயணிகளை ஒன்று சேர்க்கும் நோக்கில் ஒலி எழுப்பி சப்தமிடல், அந்த இடங்களில் அங்கீகாரம் இன்றி அதிகார சபையின் உத்தியோகத்தர்களின் கடமை நடவடிக்கைகளுக்கு பயணிகளை இடையூறு ஏற்படுத்தும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளல், தண்டனைக்குரிய குற்றமாகும். அச் சந்தர்ப்பத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அல்லது அதிகார சபையின் உத்தியோகத்தர்களுக்கு அவ்வாறான நபர்களுக்கு எதிராக உரிய நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடர இயலுமானதுடன், வழக்கு விசாரணையின் போது குற்றவாளியாக காணப்பட்டால் இரண்டாயிரம் ரூபாவிற் கு (ரூ.2000.00) குறையாத ஐம்பதாயிரம் ரூபாவிற்கு (ரூ.50000.00) மேற்படாத அபராதத்திற்கு அல்லது ஒரு ஆண்டுக்கு மேற்படாத காலத்திற்கான சிறைத்தண்டனைக்கு அல்லது அத் தண்டனை இரண்டிற்கும் உட்படுதல் வேண்டும்.

*உரிமப்பத்திரம் இன்றி பாடசாலை பிள்ளைகளுடன் பயணித்தல்.*

54. அதிகார சபையினால் வழங்கப்பட்ட ஏதாவதொரு உரிமப்பத்திரம் இன்றி பாடசாலை பிள்ளைகளை கொண்டு செல்ல கூடாததுடன், அவ்வாறு செய்வது இச் சாசனத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். மேற்குறிப்பிட்ட குற்றத்தை புரிகின்றவரிடம் அக் குற்றத்திற்காக ஐயாயிரம் ரூபா (ரூ.5000.00) நிலையத் அபராதத்தினை அதிகார சபையின் அதிகாரமுடைய உத்தியோகத்தர் ஒருவர் அறவிட்டு அந்த அபராத தொகையை செலுத்தாத போது பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு அல்லது அதிகார சபையின் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ்வாறான நபர்களுக்கு எதிராக உரிய நீதவான் நீதிமன்றத ் தில் வழக்கு தொடர இயலுமாவதுடன், வழக்கு விசாரணையின் போது குற்றவாளியாக காணப்பட்டால் இரண்டாயிரம் ரூபாவிற்கு (ரூ. 2000.00) குறையாத அபராதத்திற் கு அல்லது ஐம்பதாயிரம் ரூபாவிற்கு (ரூ.50000.00) மேற்படாத அபராதத்திற்கு அல்லது ஓர் ஆண்டுக்கு மேற்படாத காலத்திற்கு சிறைத் தண்டனைக்கு அல்லது அத் தண்டனை இரண்டிற்கும் உற்படுதல் வேண்டும்.

*உரிமப்பத்திரம் இன்றி பொது போக்குவரத்து சேவை வழங்குதல்.*

55. அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற ஏதாவதொரு அனுமதிப்பத்திரம் இன்றி கைத்தொழில் பேட்டை அல்லது சேவை நிலையங்களுக்காக பணியாளர்களை கொண்டு செல்ல கூடாததுடன், அவ்வாறு செய்வது இச் சாசனத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். அக் குற்றத்தினை புரிகின்றவரினால் உரிய ஆண்டிற்காக அறவிடப்படுகின்ற உரிமப்பத்திரக் கட்டணத்தினை போன்று இரு மடங்கு மற்றும் ஐயாயிரம் ரூபா (ரூ.5000.00) நிலையத் தண்டம் (சேவைக் கட்டணம்) அதிகார சபையினால் அதிகாரம் வழங்கப்பட்ட அதிகார சபையின் உத்தியோகத்தர் ஒருவருக்கு செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்த தவறுகின்ற சந்தர்ப்பத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு அல்லது அதிகார சபையின் உத்தியோகத்தருக்கு எதிராக உரிய நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடர முடிவதுடன், வழக்கு விசாரணையின் போது குற்றவாளியான சந்தர்ப்பத்தில் இரண்டாயிரம் ரூபாவிற்கு (ரூ.2000.00) குறையாத மற்றும் ஐம்பதாயிரம் ரூபாவிற்கு (ரூ.50000.00) மேற்படாத தண்டத்திற்கு அல்லது ஓர் ஆண்டுக்கு மேற்படாத காலத்திற்கு சிறைத் தண்டனைக்கு அல்லது அத் தண்டனை இரண்டிற்கும் உட்படுதல் வேண்டும்.

*அதிகார சபைக்கு தடைகள் தாக்கங்கள் ஏற்படுத்தல்.*

56. அதிகார சபையினால் இச் சாசனத்தின் கீழ் அதிகார சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பணிகள் மற்றும் செயற்பாடுகளை நிறைவேற்றும் போது அல்லது அதிகார சபையினால் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரினால் அவ்வாறு அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரங்கள் பணிகள் மற்றும் செயற்பாடுகளை நிறைவேற்றும் போது அதற்கு சட்ட விரோதமான வகையில் தடைகள் ஏற்படுத்துகின்ற தலையிடுகின்ற எதிர்க்கின்ற அல்லது இடையூறு விளைவிக்கின்ற தொடர்ந்து எதிர்ப்பு தெரிவிக்கின்ற அல்லது அவ்வாறு செய்வதற்கு முயற் சிக்கின்ற எவர் ஒருவருக்கும் இச் சாசனத்தின் கீழ் குற்றத்திற்கு குற்றவாளியாவதுடன், நீதவான் முன்னிலையில் நடாத்தப்படுகின்ற பதிவு வழக்கு விசாரணையின் பின் குற்றவாளியாக காணப்பட்டால் இரண்டாயிரம் ரூபாவிற்கு (ரூ.2000.00) இற்கு குறையாதமற்றும் ஐம்பதாயிரம் ரூபாவிற்கு (ரூ.50000.00) மேற்படாத தண்டத்திற்கு அல்லது ஓர் ஆண்டுக்கு மேற்படாத காலத்திற்கு சிறைத் தண்டனைக்கு அல்லது அத் தண்டனை இரண்டிற்கும் உட்படுதல் வேண்டும்.

## VIII ஆம் பகுதி

### அகற்றுதல் மற்றும் இடைக்கால விதிகள்

57. அமைச்சரினால் இச்சாசனத்தின் 5(1) ஆம் உப பிரிவின் கீழ் அதிகார சபையின் உறுப்பினர்களை நியமிக்கும் வரையில் வடமேல் மாகாணத்தின் 1995 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வடமேல் மாகாண பயணிகள் போக்குவரத்து சேவை சாசனத்தின் கீழ் நியமிக்கப்பட்ட இச் சாசனம் செயற்படுத்தப் படும் திகதிக்கு அண்மித்த திகதி வரை 1995 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வடமேல் மாகாணத்தின் பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபையில் பணிப்பாளர் பதவியினை வகிக்கின்ற அனைத்து உறுப்பினர்களும் இச் சாசனத்தின் கீழ் நியமிக்கப்பட்ட அதிகார சபையின் பணிப்பாளர்களாக கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்.

அகற்றப்பட்ட சாசனத்தின் கீழான ஒழுங்குமுறை (கட்டளை)

58. சாசனத்தினை செயற்படுத்தப்படும் திகதிக்கு முன்புள்ள திகதியில் 1995 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வடமேல் மாகாணத்தின் பயணிகள் போக்குவரத்து சேவைச் சாசனத்தின் கீழ் சேவையில் ஈடுபட்டுள்ள அனைத்து உத்தியோகத்தர்களும் வேறு பணியாளர்களும் உரிய பயணிகள் போக்குவரத்து சேவைச் சாசனத்தின் கீழான சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தொடர்புள்ள கட்டளைகள் மற்றும் உடன்படிக்கைகளுக்கு உட்பட்டு அதிகார சபையின் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களாக கருதப்பட வேண்டும். அப் பணியாளர்களது சேவையினை அவர்களது சேவை பெறுநர் பற்றி சட்டரீதியான காரணம் இன்றி வேறு விதத்தில் முடிவுறுத்த கூடாது.

அதிகார சபையின் பணியாளர்கள்

59. (1). சாசனம் செயற்படுத்தப்படும் திகதிக்கு முன்புள்ள திகதியில் 1995 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வடமேல் மாகாணத்தின் பயணிகள் போக்குவரத்து சேவை சாசனத்தின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள உரிய அதிகார சபைக்குரிய அனைத்து நிதியங்கள் உட்பட உரிய அதிகார சபையின் அனைத்து நிலையான மற்றும் நிலையற்ற சொத்துக்கள் அதிகார சபைக்கு உரித்தாக்க வேண்டியதுடன் அனைத்து சொத்துக்களும் அதிகார சபைக்குரிய சொத்தாக வேண்டும்.

உடன்படிக்கையின் உரிமைகள் கடமைகள் பொறுப்பு மற்றும் ஒதுக்கப்பட்டுள்ளதும் தற்போதுள்ள வழக்குகளுக்கான மானியம்

(2) சாசனம் செயற்படுத்தப்படும் திகதிக்கு முன்புள்ள திகதியில் அதிகாரப்படுத்தப்பட்டு காணப்படும் 1995 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வடமேல் மாகாணத்தின் பயணிகள் போக்குவரத்து சேவை சாசனத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள வடமேல் மாகாணத்தின் பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபையினால் ஏற்படுத்தப்பட்டுள்ள பணியாளர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் ஊக்குவிப்பு சம்பளம் பற்றி எல்லா கடமைகள் மற்றும் பொறுப்பு உற்பட எல்லா ஒப்பந்தமும் உடன்படிக்கைகளும் அதிகார சபையின் ஒப்பந்தம் மற்றும் உடன்படிக்கையாக கருதப் பட வேண்டும்.

(3) சாசனத்தில் செயற்படுத்தப்படும் திகதிக்கு முன்புள்ள திகதியில் ஏதாவதொரு நீதிமன்றத்தில் அல்லது நடுவர் குழுவில் 1995 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வடமேல் மாகாணத்தின் பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபையினால் அல்லது அவ் அதிகார சபைக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள அல்லது சமர்பிக்கப்பட்ட வழக்கு, கோரிக்கை அல்லது முறையீடாக கருதப்பட வேண்டியதுடன், அவற்றை கொண்டு நடாத்தல் அல்லது முடிவுறுத்த முடியும்.

(4) குறித்த திகதிக்கு முன்புள்ள திகதியில் 1995 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வடமேல் மாகாணத்தின் பயணிகள் போக்குவரத்து சேவை சாசனத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள வடமேல் மாகாணத்தின் பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபையினால் அல்லது அதற்கு எதிராக அளிக்கப்பட்டுள்ள அல்லது சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதாவதொரு வழக்கின் போது கோரிக்கையின் போது அல்லது முறையீட்டின் போது நீதிமன்றம் அல்லது தீர்ப்பு அதிகார சபையினால் அறிவித்துள்ள அல்லது வழங்கப்படுகின்ற உரிய திகதிக்கு முன்புள்ள திகதியிலேயே அதனை முழுமையாகவோ ஒரு பகுதியினையோ நிறைவேற்றாது மீதமாக காணப்படும் ஏதாவதொரு தீர்ப்பினை அல்லது வழங்களினை சந்தர்ப்பத்திற்கேற்ப அதிகார சபைக்கு அனுகூலத்திற்கு அல்லது அதற்கு எதிராக அறிவித்துள்ள அல்லது வழங்கப்பட்டுள்ள தீர்ப்பினை அறிவித்தலுக்கு அல்லது வழங்குவதற்கோ கருதப்பட வேண்டியதுடன் சிவில் வழக்கு விதிக் கோவையின் சட்டத்திட்டங்களுக்கு அல்லது தீர்மானத்தையோ வழங்கும் செயற்பாட்டில் ஈடுபடுத்துவதற்குரிய வேறு ஏதாவதொரு சாசனத்திற்கு உட்பட்டு அதிகார சபையினால் அல்லது அதற்கு எதிராக செயற்பட முடியும்.

(5) 1995 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வடமேல் மாகாணத்தின் தெருப் பயணிகள் போக்குவரத்து சேவை சாசனத்தின் கீழ் வழங்கப்பட்டதும் அல்லது உரிய சாசனத்தின் கீழ் பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரம் ஒன்றாக கருதப்பட்ட போதும் இச் சாசனம் அதிகாரப்படுத்தப்படும் திகதிக்கு ஆரம்பத்தில் செல்லுபடியாக இருந்ததாலும் பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரம் அல்லது வேறு ஏதாவதொரு ஆவணத்தினால் இச் சாசனத்தின் கீழ் முன்பு வழங்கப்பட்டு இரத்து செய்யப்படாவிட்டால் அதில் குறிப்பிடப்பட்டுள்ள செல்லுபடியாகும் காலத்தினுள் இச் சாசனம் வழங்கப்பட்ட பயணிகள் போக்குவரத்து சேவை உரிமப்பத்திரமாக கருதப்பட வேண்டும்.

60. இச் சாசனம் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளின் வசனங்களிடையே ஏதாவதொரு வேறுபாடு ஏற்பட்டால் அப்போது சிங்கள மொழியின் வசனங்கள் அதிகாரப்படுத்தப்படும்.

## IX **ஆம் பகுதி**

### பொருள் விளக்கம்

61. இச் சாசனத்தில் வசனம் சம்பந்தமாக விளக்கம் தேவைப்பட்டால்,

- "மாகாணம்" என்பது வடமேல் மாகாணம் என்று கருதப்படும்.
- "சபை" என்பது வடமேல் மாகாண சபை என்று கருதப்படும்.
- "ஆளுநர் அவர்கள்" என்பது வடமேல் மாகாண சபையில் ஆளுநர் பதவியினை வகிப்பவர் என்று கருதப்படும்.
- "அமைச்சுக் குழு" என்பது வடமேல் மாகாண சபையின் அமைச்சுக் குழு என்று கருதப்படும்,
- "அமைச்சர் அவர்கள்" என்பது வடமேல் மாகாண சபையின் அமைச்சுக் குழுவின் போக்குவரத்து சேவை விடயப் பொறுப்புடைய அமைச்சர் என்று கருதப்படும்,
- "சிரேஸ்ட உத்தியோகத்தர்" என்பது இலங்கை நிருவாக சேவையில் உதவி செயலாளர் பதவிக்கு குறையாத பதவியில் உள்ள உத்தியோகத்தர் ஒருவர் அல்லது அதற் கு சமமான சேவைகளில் அதற்கு சமமாக கடமைப் புரிகின்ற ஒருவர் என்று கருதப்படும்.
- "உத்தியோகத்தர்" என்பது வடமேல் மாகாண போக்குவரத்து சேவை அதிகார சபையில் பணிப்பாளர் குழுவின் உறுப்பினர்கள் உட்பட அதிகார சபையில் பணி புரிகின்ற அனைத்து பணியாளர்களும் என்று கருதப்படும்.
- "உரிமப்பத்திரம்" என்பது "பயணிகள் போக்குவரத்து சேவை உரிமப்பத்திரம்" "பொருட்கள் கொண்டு செல்லும் சேவைகளுக்கான உரிமப்பத்திரம்", "விசேட சேவை உரிமப்பத்திரம்", "தெரு உரிமப்பத்திரம்" மற்றும் சட்டரீதியான போக்குவரத்து சேவை உரிமப்பத்திரம்" "பாடசாலை சேவை உரிமப்பத்திரம்" "கைத்தொழில் பேட்டை போக்குவரத்து சேவை உரிமப்பத்திரம்" ஆகிய பெயர்களில் எந்தவொரு பெயரிலாவது இச் சாசனத்தின் கீழ் அல்லது வேறு எழுத்து மூலமான சட்டத்தின் கீழ் கட்டணம், பரிசு, கைமாறாக அல்லது வெவ்வேறு கட்டணங்கள் மூலம் மோட்டார் வாகனத்தினால் பயணிகள் போக்குவரத்தில் அல்லது பொருட்களை கொண்டு செல்வதற்காக பயன்படுத்துவதற்கு அதிகாரம் வழங்கப்பட்ட உரிமப்பத்திரம் என்று கருதப்படும்.
- "பேரூந்து நிறுத்தும் இடம்" என்பது வடமேல் மாகாணத்தினுள் அமைந்துள்ள பேரூந்து பயணிகள் முனையம் என்று கருதப்படுவதுடன், வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட வடமேல் மாகாணத்தினுள் அமைந்துள்ள பேரூந்துகளை தரிக்கும் இடங்கள் அதிகார சபைக்குரிய வடமேல் மாகாணத்தினுள் அமைந்துள்ள பேரூந்து நிறுத்துமிடங்கள் மற்றும் பெருந்தெருக்களில் பேரூந்துகளை நிறுத்துமிடங்கள் இதில் அடங்க வேண்டும்.

- "வர்த்தமானி" என்பது இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் வர்த்தமானி என்று கருதப்படும்.
- "உள்ளூராட்சி நிறுவனம்" என்பது மாநகர சபை, நகர சபை அல்லது பிரதேச சபை என்று கருதப்படும்.
- "பேரூந்து" என்பது பேரூந்து வண்டியாக பதிவு செய்யப்பட்ட மோட்டார் கோச் வண்டி என்று கருதப்படுவதுடன் இதற்கு இரட்டை நோக்கம் கொண்ட வாகனமும் அடங்குவதாக கருதப்பட வேண்டும்.
- "பயணி" என்பது வாடகை வாகனத்தில் அல்லது பேரூந்தில், பாடசாலை சேவை பேரூந்து அல்லது வேன், கைத்தொழில் பேட்டை பேரூந்தில் கட்டணத் தை செலுத்தி பயணிப்பது என்று கருதப்படும்.
- "கட்டணம்" என்பது பேரூந்தில் பயணியாக கொண்டு செல்வதற்காக எவருக்காவது உரிமை வழங்கப்படுபவரினால் செலுத்தப்படும் கொடுப்பனவு என்று கருதப்படும்.
- "மோட்டார் வண்டி" என்பது மோட்டார் வண்டி போக்குவரத்து சட்டத்தில் பொருள் விளக்கப்பட்டுள்ள மோட்டார் வாகனம் என்று கருதப்படும்.
- "மோட்டார் வாகனம்" என்பது மோட்டார் வண்டி சட்டத்தில் பொருள் விளக்கப்பட்டுள்ள மோட்டார் வாகனம் என்று கருதப்படும்.
- "பயணிகள் போக்குவரத்து சேவைகள்" என்பது பெருந்தெரு ஊடாக கட்டணம் அறவிட்டு பயணிகளை பாடசாலை மாணவர்கள், அலுவலக பணியாளர்கள், கைத்தொழில் பேட்டை தொழிலாளர்கள் போக்குவரத்து செய்கின்ற அனைத்து வாகனங்களும் என்று கருதப்படும்.
- "முறையான ஆட்சேர்ப்பு நடைமுறை" என்பது வடமேல் மாகாணத்தின் ஆளுநர் அவர்களினால் அனுமதிக்கப்படுகின்ற ஆட்சேர்ப்பு நடைமுறை என்று கருதப்படும்.
- "சாரதி" என்பது இச்சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எந்த ஒரு வாகனத்தினையும் செலுத்துவதற்காக செல்லுபடியாகும் சாரதி உரிமப்பத்திரம் உடைய வாகனத்தினை செலுத்துபவர் என்று கருதப்படும்.
- "நடத்துனர்" என்பது இச் சாசனத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா வாகன பயணிகளுக்கும் பிரவேசப்பத்திரம் வழங்குவதற்கான வசதி, பாதுகாப்பு மற்றும் பயணிகளுக்கான நலன்புரியினை வழங்குகின்ற அதிகார சபையினால் வழங்கப்பட்ட அடையாளச் சான்றிதழ் உரித்துடையவர் என்று கருதப்படும்.
- "சாரதி உதவியாளர்" என்பது இச் சாசனத்தின் கீழ் எந்தவொரு வாகனத்தினதும் சாரதியின் உதவிக்கு உள்ள அதிகார சபையினால் உரியவாறு பயிற்சி வழங்கப்பட்டதன் பின்பு உரிமப்பத்திரம் வழங்கப்பட்ட நபர் என்று கருதப்படும்.

EOG 01 - 0033

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.